# வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த பொதுக்கூட்ட அறிக்கை 2025.07.17

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் ஆடி மாதத்திற்கான மாதாந்த பொதுக்கூட்டம் கௌரவ தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் அவர்களின் தலைமையில் 2025.07.17ம் திகதி வியாழக்கிழமை மாலை 02.05 மணிக்கு தலைமையலுவலக சபா மண்டபத்தில் இரண்டு நிமிட மௌன வணக்கத்துடன் ஆரம்பமானது. அவ்வேளையில் கீழ்காணும் கௌரவ உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் ஆகியோர் சமூகமாகியிருந்தனர்.

1. கௌரவ உறுப்பினர் கந்தசாமி மனோகரராசா
2. கௌரவ உறுப்பினர் குலத்துங்கம் வில்வராசா
3. கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார்
4. கௌரவ உறுப்பினர் கருணாகரன் கஜகரன்
5. கௌரவ உறுப்பினர் பாலசுப்பிரமணியம் சிறிதரன்
6. கௌரவ உறுப்பினர் பொன்னம்பலம் இராசேந்திரம்
7. கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர்
8. கௌரவ உறுப்பினர் முத்தலிப் ரகுநாதன்
9. கௌரவ உறுப்பினர் சிவசுப்பிரமணியம் சீத்தா
10. கௌரவ உறுப்பினர் பாலச்சந்திரன் லஜிதரன்
11. கௌரவ உறுப்பினர் சிறிய அனிக்கிலீஸ் பிறேம்ஸ்ரலன்
12. கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன்
13. கௌரவ உறுப்பினர் ஐயாத்துரை மதூசன்
14. கௌரவ உறுப்பினர் மேகலா திருஞானசம்பந்தர்
15. கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன்
16. கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ்
17. கௌரவ உறுப்பினர் தேவச்சந்திரன் வஜிந்தன்
18. கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன்
19. கௌரவ உறுப்பினர் சந்திரன் தயானி
20. கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன்
21. கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன்
22. கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா
23. கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன்
24. கௌரவ உறுப்பினர் வித்தியா கிருபாகரன்
25. கௌரவ உறுப்பினர் சுகீர்த்தனா ரவிச்சந்திரன்
26. கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன்
27. கௌரவ உப தவிசாளர் பொன்னுத்துரை தங்கராசா
28. கௌரவ உறுப்பினர் ஜெகதீஸ்வரி சுதர்சன்
29. கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ்
30. கௌரவ உறுப்பினர் கந்தசாமி ஜெயரூபமூர்த்தி
31. கௌரவ உறுப்பினர் துறைராஜா காளிதாஸ்

- கௌரவ தவிசாளர் தனது தலைமையுரையிலே இன்றைய சபையின் அமர்வுக்கு வருகை தந்துள்ள சபையினுடைய கௌரவ உப தவிசாளர் மற்றும் சபையின் கௌரவ உறுப்பினர்கள், செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் மதிய நேர வணக்கத்தினை தெரிவித்து இக்கூட்டமானது சபையின் இரண்டாவது கூட்டமெனவும் எனினும் இக் கூட்டம் காலை 9.30 மணிக்கு நடைபெற இருந்ததாகவும் ஆனால் யாழ்மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டமும் இன்று காலை 9.00 மணிக்கு நடைபெற்றதனால் அக் கூட்டத்தில் தவிசாளரும் செயலாளரும் கலந்து கொள்ள வேண்டியயிருந்தமையினால் நேரம் மாற்றம் செய்யப்பட்டது எனவும் தெரிவித்தார்.

- எங்களுடைய பிரதேசத்தில் சில அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் செய்வதற்கான முன்னரே ஏற்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ள மற்றும் எதிர்வரும் காலங்களில் கிடைக்கவிருக்கின்ற உலக வங்கியினூடாக சில திட்டங்களும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினூடாக சில திட்டங்களும் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையினூடாக சில திட்டங்களும் நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்றும் தெரிவித்தார். ஏற்கனவே 182 மில்லியன் ரூபா நகர அபிவிருத்தி அதிகார சபையின் அமைச்சினூடாக ஒதுக்கி கிடைக்கப்பெற்றாலும் மேலதிகமாக இன்றைய யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினூடாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் அமைச்சினூடாக மீள்குடியேற்ற பிரதேசத்தின் வீதி அபிவிருத்தியில் மாங்கொல்லை வைரவர் வீதியும் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த வருடத்தின் மீதமுள்ள ஐந்து மாத காலத்திற்குள் ஏனைய அபிவிருத்தி வேலைகளை நிறைவேற்றி முடிக்க வேண்டிய தேவைப்பாடு எமக்குள்ளது என்றும் தெரிவித்தார். மற்றும் எதிர்வரும் ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டத்தையும் நாங்கள் தயாரிக்க வேண்டிய தேவைப்பாடுகள் இருக்கின்றன. எனவே கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய வட்டாரங்களில் நிறைவேற்ற வேண்டிய வேலைகளை முன்னுரிமைப்படுத்தி எதிர்வரும் மாதத்திற்குள் திட்டங்களினை தருமாறும் முன்னுரிமை அடிப்படையில் அத்தியாவசியமாக செய்ய வேண்டிய வேலைகளை சபை நிதியிலும் மற்றும் பாரிய வேலைகள் ஏதும் இருந்தால் வேறு நிதிகளிலும் அபிவிருத்தி திட்டங்களின் முன்மொழிவுகள் கோரப்படும் காலத்தில் முன்மொழிவுகளினை அனுப்பி வேலைகளை நிறைவேற்றலாம் என்றும் தெரிவித்தார். தற்பொழுது பயன்பாட்டிலுள்ள வீதிகளில் வெள்ளநீர் தேங்கும் வீதிகளை சபைநிதியில் விரைவுபடுத்தி அபிவிருத்தி செய்யவேண்டுமென்றும் தெரிவித்தார். மயிலிட்டி வடக்கில் பயன்பாட்டிலுள்ள பூதவிராயர் கோயில் வீதியின் மதகு உடைந்திருப்பதனால் அதனை மதிப்பீடு செய்து விரைவுபடுத்தி புனரமைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.
- இன்றைய அமர்வுக்கு எமது சபையின் கௌரவ உறுப்பினர் இரத்தினம் அனுஷா அவர்கள் சுகயீனம் காரணமாக கூட்டத்திற்கு சமூகமளிக்க இயலவில்லை என்றும் தனது விடுமுறையினை அனுமதிக்குமாறு கடித மூலம் அறியத்தந்துள்ளார். குறித்த கௌரவ உறுப்பினர் இரத்தினம் அனுஷா அவர்களின் விடுமுறையினை அனுமதிப்பதற்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.
- கௌரவ உறுப்பினர் இரத்தினம் அனுஷா அவர்களின் விடுமுறையினை அனுமதிக்கலாமென கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் முன்மொழிய கௌரவ உப தவிசாளர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து நிகழ்ச்சி நிரல் அடிப்படையில் 27.06.2025 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கையை அங்கீகரிக்குமாறு கௌரவ தவிசாளர் அவர்களினால் கோரப்பட்ட போது கௌரவ உறுப்பினர்களால் பின்வரும் திருத்தங்கள் தெரிவிக்கப்பட்டன.

  - கௌரவ உறுப்பினர் துறைராஜா காளிதாஸ் அவர்கள் (27.06.2025) நடைபெற்ற கூட்ட அறிக்கையில் மாவைகலட்டியில் இந்து கோயிலுக்கு பக்கத்தில் வீதியோரமாக மீன் விற்பனை செய்கிறார்கள் அதனை நிறுத்தி, பிரதேச சபை கண்காணிப்பில் உள்ள நீர்த் தாங்கியுள்ள காணியும் பற்றையாக உள்ளது எனவும் அதனை துப்பரவு செய்து அதில் ஒரு பகுதியினை தற்போது மீன் சந்தை அமைப்பதற்கு ஏற்பாடு செய்து தரும்படியும் தெரிவித்தேன் என்று கூறியிருந்தார்.

  - கௌரவ உறுப்பினர் பாலசுப்பிரமணியம் சிறிதரன் அவர்கள் (27.06.2025) நடைபெற்ற கூட்ட அறிக்கையில் தனது வட்டாரத்தில் வீதிவிளக்குகள் பொருத்த வேண்டியுள்ளது என்றும் பொக்கலாவலை இந்துமயானம் ஒரே பற்றையாக உள்ளது எனவும் துப்பரவு செய்ய வேண்டியுள்ளது மற்றும் சந்தைகளுக்கு அருகில் உள்ள மரக்கறி விற்பனை செய்பவர்களுக்கு கால அவகாசம் கொடுத்து அப்புறப்படுத்துமாறும் தெரிவித்தேன் என்றும் கூறியிருந்தார்.

- மேற்குறிப்பிட்ட திருத்தங்களுடன் ஆனி மாதம் 27.06.2025ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கை சரியென கௌரவ உறுப்பினர் கந்தசாமி மனோகரராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் வழிமொழிய சபையினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் சுரேகா கோகுலன் அவர்கள் பி.ப 02.27 மணிக்கு வருகை தந்தார்.

- 2025.07.09 ஆம் திகதியில் நடைபெற்ற நிதிக்குழுக் கூட்ட சிபாரிசிற்கமைய கொடுப்பனவுகள் விபரம் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | Sakana Work Shop, K.K.S Road, Maruthanarmadam. | NP LG 3711 Gully Bowser முன் Cab திருத்தம் செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 865,000.00 |
| 02 | RK Electricals K.K.S Road, Mallakam. | வீதி விளக்குகள் கொள்வனவு செய்தமைக்கான முற்பணக் கொடுப்பனவு | Rs 496,755.00 |

**தீர்மான இல :- 01/2025.07.17**

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | Sakana Work Shop, K.K.S Road, Maruthanarmadam. | NP LG 3711 Gully Bowser முன் Cab திருத்தம் செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 865,000.00 |
| 02 | RK Electricals K.K.S Road, Mallakam. | வீதி விளக்குகள் கொள்வனவு செய்தமைக்கான முற்பணக் கொடுப்பனவு | Rs 496,755.00 |

மேற்படி கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- தொழில்நுட்பவியல் கல்லூரியில் National Certificate In Information Communication Technology Technician - NVQ Level 4 கற்கைநெறியினை தொடர்கின்ற செல்வி.ஜெ.பவிந்தினி அவர்கள் ஆறு மாத காலத்திற்கு எமது சபையில் பயிற்சி பெறுவதற்கு கோரிக்கை கடிதம் சமர்ப்பித்துள்ளார். அவரை 2025.08.04 தொடக்கம் 2026.02.03 வரையான ஆறு மாத காலப்பகுதிக்கு எமது சபையில் பயிற்சியாளராக இணைத்துக் கொள்வதற்கும் சபை நிதி மூலம் நாளாந்தம் ரூபா 1000.00 கொடுப்பனவு வழங்குவதற்கும் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 02/2025.07.17**

தொழில்நுட்பவியல் கல்லூரியில் National Certificate In Information Communication Technology Technician - NVQ Level 4 கற்கைநெறியினை தொடர்கின்ற செல்வி.ஜெ.பவிந்தினி அவர்கள் ஆறு மாத காலத்திற்கு எமது சபையில் பயிற்சி பெறுவதற்கு கோரிக்கை கடிதம் சமர்ப்பித்துள்ளார். அவரை 2025.08.04ம் திகதி தொடக்கம் 2026.02.03 வரையான ஆறு மாத காலப்பகுதிக்கு எமது சபையில் பயிற்சியாளராக இணைத்துக் கொள்வதற்கும் சபை நிதி மூலம் நாளாந்தம் ரூபா 1000.00 கொடுப்பனவு வழங்குவதற்கும் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- சபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் 01.08.2025 – 31.12.2025 வரை வழங்குவதற்கு 30.06.2025 உள்ளூர் கேள்வி கோரப்பட்டு 08.07.2025 பி.ப 2.30 திறக்கப்பட்டது இதில் எவரும் கேள்விகோரவில்லை எனவே கேள்விச்சபையின் தீர்மானத்திற்கமைய மீண்டும் ஏலம் கோருவதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | குத்தகைவிபரம்<br>காலம் 01-08-2025-31.12.2025 | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) |
|---|---|---|---|---|
| **மல்லாகம் உப அலுவலகம்** | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்பபடிச் சந்தை | - | 21,035.00 | 1,000.00 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி மாட்டிறைச்சிக் கடை | 1,500.00 | 150,000.00 | 5,000.00 |
| 03 | அளவெட்டி மலைவேம்படி பன்றிறைச்சிக் கடை | 1,000.00 | 75,000.00 | 1,000.00 |
| 04 | மல்லாகம் பொதுச்சந்தை | …… | 45,460.00 | 1,000.00 |
| 05 | மல்லாகம் பொதுச்சந்தை ஆட்டுறைச்சிக் கடை | 2,750.00 | 56,540.00 | 5,000.00 |
| 06 | இறால்மடம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,250.00 | 219,625.00 | 5,000.00 |
| 07 | கணேஸ்வரம் சந்தை கோழிக்கடை | 1,000.00 | 23,585.00 | 1,000.00 |
| **தெல்லிப்பளை உப அலுவலகம்** | | | | |
| 01 | கூத்தன்சீமாச் சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 3,710.00 | 1,000.00 |
| 02 | கீரிமலை மரக்கறிச்சந்தை | | 11,250.00 | 1,000.00 |
| 03 | வீமன்காமம் பொதுச்சந்தை கோழிக்கடை | 1,050.00 | 567,700.00 | 5,000.00 |
| 04 | வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 6,000.00 | 1,000.00 |
| **மயிலிட்டி உப அலுவலகம்** | | | | |
| 01 | குரும்பசிட்டிச் சந்தை | ……….. | 3,350.00 | 1,000.00 |
| **காங்கேசன்துறை உப அலுவலகம்** | | | | |
| 01 | காங்கேசன்துறை பொதுச்சந்தை | ……… | 29,200.00 | 1,000.00 |
| 02 | காங்கேசன்துறை சந்தை கோழிக்கடை | 1,200.00 | 32,040.00 | 1,000.00 |
| 03 | காங்கேசன்துறை சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,200.00 | 29,250.00 | 1,000.00 |
| 04 | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல - 01 | 1,200.00 | 24,750.00 | 1,000.00 |

**தீர்மான இல :- 03/2025.07.17**

*சபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் 01.08.2025 – 31.12.2025 வரை வழங்குவதற்கு 30.06.2025 உள்ளூர் கேள்வி கோரப்பட்டு 08.07.2025 பி.ப 2.30 திறக்கப்பட்டது இதில் எவரும் கேள்விகோரவில்லை கேள்விச்சபையின் தீர்மானத்திற்கமைய மீண்டும் உள்ளூர் ஏலம் கோருவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

| இல | குத்தகைவிபரம்<br>காலம் 01-08-2025-31.12.2025 | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) |
|---|---|---|---|---|
| **மல்லாகம் உப அலுவலகம்** | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 21,035.00 | 1,000.00 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி மாட்டிறைச்சிக் கடை | 1,500.00 | 150,000.00 | 5,000.00 |
| 03 | அளவெட்டி மலைவேம்படி பன்றிறைச்சிக் கடை | 1,000.00 | 75,000.00 | 1,000.00 |
| 04 | மல்லாகம் பொதுச்சந்தை | …… | 45,460.00 | 1,000.00 |
| 05 | மல்லாகம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 2,750.00 | 56,540.00 | 5,000.00 |
| 06 | இறால்மடம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,250.00 | 219,625.00 | 5,000.00 |
| 07 | கணேஸ்வரம் சந்தை கோழிக்கடை | 1,000.00 | 23,585.00 | 1,000.00 |
| **தெல்லிப்பளை உப அலுவலகம்** | | | | |
| 01 | கூத்தன்சீமாச் சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 3,710.00 | 1,000.00 |
| 02 | கீரிமலை மரக்கறிச்சந்தை | | 11,250.00 | 1,000.00 |
| 03 | வீமன்காமம் பொதுச்சந்தை கோழிக்கடை | 1,050.00 | 567,700.00 | 5,000.00 |
| 04 | வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 6,000.00 | 1,000.00 |
| **மயிலிட்டி உப அலுவலகம்** | | | | |
| 01 | குரும்பசிட்டிச் சந்தை | ……….. | 3,350.00 | 1,000.00 |
| **காங்கேசன்துறை உப அலுவலகம்** | | | | |
| 01 | காங்கேசன்துறை பொதுச்சந்தை | ……… | 29,200.00 | 1,000.00 |
| 02 | காங்கேசன்துறை சந்தை கோழிக்கடை | 1,200.00 | 32,040.00 | 1,000.00 |
| 03 | காங்கேசன்துறை சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,200.00 | 29,250.00 | 1,000.00 |
| 04 | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல - 01 | 1,200.00 | 24,750.00 | 1,000.00 |

- *எமது சபையின் நிரந்தரக்கடைகள் 2025.06.30ம் திகதி உள்ளூர் கேள்வி கோரியதற்கு அமைவாக 2025.07.08 திகதி பி.ப 03.00 மணிக்கு உள்ளூர் கேள்வி திறக்கப்பட்டது கேள்விச்சபையானது பின்வரும் கடைகளை கேள்வி கோரியவருக்கு பின்வரும் தொகையில் வழங்கத் தீர்மானித்ததற்கு அமைய சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.*

| இல | கடையின் விபரம் | தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் | கேள்வித் தொகை |
|---|---|---|---|
| *01* | கீரிமலை சந்தைக்கடை -02 (கண்ணாடியினால் பிரி க்கப்பட்டு அடைக்கப்பட்ட பகுதி) | தெல்லிப்பளை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் | 770,000.00 |
| *02* | மல்லாகம் சந்தை கடை தொகுதி இல 6 | யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 845,000.00 |

**தீர்மான இல :- 04/2025.07.17**

எமது சபையின் நிரந்தரக்கடைகள் 2025.06.30ம் திகதி உள்ளூர் கேள்வி கோரியதற்கு அமைவாக 2025.07.08 திகதி பி.ப 03.00 மணிக்கு உள்ளூர் கேள்வி திறக்கப்பட்டது. பின்வரும் கடைகளை கேள்விச்சபையின் தீர்மானத்திற்கு அமைய கேள்வி கோரியவருக்கு வழங்கியமைக்கான தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| இல | கடையின் விபரம் | தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் | கேள்வித் தொகை |
|---|---|---|---|
| *01* | கீரிமலை சந்தைக்கடை -02 (கண்ணாடியினால் பிரி க்கப்பட்டு அடைக்கப்பட்ட பகுதி) | தெல்லிப்பளை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் | 770,000.00 |
| *02* | மல்லாகம் சந்தை கடை தொகுதி இல 6 | யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 845,000.00 |

- ❖ கௌரவ உறுப்பினர் வயிரவன் தங்கவேல் அவர்கள் பி.ப 02.31 மணிக்கு வருகை தந்தார்.

- ➢ மேலும் எவராலும் கேள்வி கோராத காரணத்தினால் பின்வரும் நிரந்தரக்கடையினை மீள் உள்ளூர் கேள்வி மூலம் கேள்வி கோருவதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| விபரம் | பரப்பளவு (சதுரஅடி) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ஒருங் கிணைந்த கட்டுப்பணம்) | மாத வாடகை | கேள்விப் பத்திர கட்டணம் | கேள்வி வைப்பு மீளளிக்கக் கூடியது |
|---|---|---|---|---|---|
| மல்லாகம் சந்தை கடை தொகுதி இல 7 | *162.5* | 840,000.00 | 3,500.00 | 1,500.00 | 84,000.00 |

**தீர்மான இல :- 05/2025.07.17**
கேள்வி கோராத கீழ்வரும் நிரந்தரக்கடையினை கேள்விச்சபையின் தீர்மானத்திற்கமைய மீள் உள்ளூர் கேள்வி மூலம் கேள்வி கோருவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் வயிரவன் தங்கவேல் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| விபரம் | பரப்பளவு (சதுரஅடி) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ஒருங் கிணைந்த கட்டுப்பணம்) | மாத வாடகை | கேள்விப் பத்திர கட்டணம் | கேள்வி வைப்பு மீளளிக்கக் கூடியது |
|---|---|---|---|---|---|
| மல்லாகம் சந்தை கடை தொகுதி இல 7 | *162.5* | 840,000.00 | 3,500.00 | 1,500.00 | 84,000.00 |

- பிரதேச சபைகள் சட்டம் பாகம் VI உப பிரிவு *170* இன் பிரகாரம் கீழ்க்குறிப்பிடப்பட்ட விபரப்படி *2025* ஆம் ஆண்டுக்கான முதலாவது உபமானிய வரவுசெலவுத்திட்டம் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**முதலாவது உபமானிய வரவு செலவுத்திட்டம்-2025**

**வருமானம்** **செலவினம்**

| இல. | வருமான த் தலைப்பு | விபரம் | தொகை | செலவினத் தலைப்பு | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1.7.71(3) | சபை உறுப்பினர் கொடுப்பனவு மீளளிப்பு | 3,753,000.00 | *101.01-09*(ii) | சபை உறுப்பினர் கொடுப்பனவு | 3,753,000.00 |
| 2 | 1-7-71(i) | நிர்வாக மீளளிப்பு | 24,000.00 | *101-01-09*-iii | மொழித்தேர்ச்சிப் படி | *24,000.00* |
| | | | 3,777,000.00 | | | 3,777,000.00 |

**தீர்மான இல :- 06/2025.07.17**
பிரதேச சபைகள் சட்டம் பாகம் VI உப பிரிவு *170* இன் பிரகாரம் கீழ்க்குறிப்பிடப்பட்ட விபரப்படி *2025* ஆம் ஆண்டுக்கான முதலாவது உபமானிய வரவுசெலவுத்திட்டத்திற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கருணாகரன் கஜகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**முதலாவது உபமானிய வரவு செலவுத்திட்டம் - 2025**

**வருமானம்** **செலவினம்**

| இல. | வருமானத் தலைப்பு | விபரம் | தொகை | செலவினத் தலைப்பு | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1.7.71(3) | சபை உறுப்பினர் கொடுப்பனவு மீளளிப்பு | 3,753,000.00 | *101.01-09*(ii) | சபை உறுப்பினர் கொடுப்பனவு | 3,753,000.00 |
| 2 | 1-7-71(i) | நிர்வாக மீளளிப்பு | 24,000.00 | *101-01-09*-iii | மொழித்தேர்ச்சிப் படி | *24,000.00* |
| | | | 3,777,000.00 | | | 3,777,000.00 |

- எமது சபையின் ஆளுகைக்குட்பட்ட பின்வரும் வீதிகள் உலக வங்கியின் நிதி பங்களிப்புடன் Inclusive Connectivity and Development Project கீழ் யாழ் மாவட்டத்திலுள்ள கிராமிய வீதிகளை புனரமைத்தல் / பராமரிக்கும் திட்டத்திற்கமைவாக காப்பெட் வீதிகளாக புனரமைக்கப்படவுள்ளமையினால் குறித்த வீதிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளித்து வீதிப்புனரமைப்பினை மேற்கொள்ள சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | விபரம் | நீளம்(KM) | கிராம அலுவலர் பிரிவு | வட்டாரம் |
|---|---|---|---|---|
| 01 | மாரி வீதி | *2.16* | J/244 | 15 |
| 02 | முனியப்பர் வீதி | *1.8* | J/239 | 16 |

**தீர்மான இல :- 07/2025.07.17**
எமது சபையின் ஆளுகைக்குட்பட்ட பின்வரும் வீதிகள் உலக வங்கியின் நிதி பங்களிப்புடன் Inclusive Connectivity and Development Project கீழ் யாழ் மாவட்டத்திலுள்ள கிராமிய வீதிகளை புனரமைத்தல் / பராமரிக்கும் திட்டத்திற்கமைவாக காப்பெட் வீதிகளாக புனரமைக்கப்படவுள்ளமையால் குறித்த வீதிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளித்து வீதிப்புனரமைப்பினை மேற்கொள்ள அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| இல | விபரம் | நீளம்(KM) | கிராம அலுவலர் பிரிவு | வட்டாரம் |
|---|---|---|---|---|
| 01 | மாரி வீதி | *2.16* | J/244 | 15 |
| 02 | முனியப்பர் வீதி | *1.8* | J/239 | 16 |

- வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் பலாலி வீதி இரவு நேரத்தில் மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்படவிருப்பதனால் 100W LED Bulb -70 (Set) கொள்வனவு செய்வதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 08/2025.07.17**

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் பலாலி வீதி இரவு நேரத்தில் மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்படவிருப்பதனால் 100W LED Bulb -70 (Set) கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- சபையின் கிராம வீதிகளில் பொருத்தப்பட்டு சேதமடைந்த வீதி விளக்குகளை திருத்தியமைப்பதற்கு 30W – 100 (Set)கொள்வனவு செய்வதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 09/2025.07.17**

சபையின் கிராம வீதிகளில் பொருத்தப்பட்டு சேதமடைந்த வீதி விளக்குகளை திருத்தியமைப்பதற்கு 30W – 100 (Set)கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கௌரவ தவிசாளர் அவர்கள் ஏற்கனவே இரு வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் காப்பெட் வீதியாக புனரமைப்பதற்காக அடையாளப் படுத்தப்பட்டிருக்கின்றது என்றும் அதன் தொடக்க வேலைகளும் நடைபெற்றுள்ளது. காங்கேசன்துறையிலுள்ள கல்லூரி வீதியும் தையிட்டியிலுள்ள கலைமகள் வீதியும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் புனரமைக்கப்பட உள்ளன எனவும் உத்தியோகபூர்வமான கடிதம் கிடைக்கப்பெறும் போது சபைக்கு தெரியப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் காங்கேசன்துறையில் உள்ள கல்லூரி வீதி புனரமைக்கும் போது அதில் உள்ள பாலத்தினையும் புனரமைக்குமாறும் கேட்டுக்கொண்டார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் தெரிவிக்கும் போது அவ்விடத்தில் இரு பாலங்கள் உள்ளன எனவும் அவ் வீதி புனரமைப்புச் செய்வதற்கு கையளிக்கும் போது அதனை தெரியப்படுத்தி கையளிப்பு செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

- எமது சபையின் சென்ற கூட்டத் தீர்மானம் 11/2025.06.27 இன் பிரகாரம் வெளிவாரி அடிப்படையில் மின்னியலாளர் ஒருவரை கோரி பெற்று வீதி விளக்குகள் பொருத்தும் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றார். எனினும் உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களின் NP/14/4/CA/GEN/2025ம் இலக்க 2025.07.02 ம் திகதிய கடிதப்பிரகாரம் மின்சார சபையின் அனுமதிப்பத்திரம் (license) இல்லாத ஊழியர்களைக்கொண்டு உள்ளூராட்சி மன்றங்கள் வீதி விளக்குகளை பொருத்துதல் மற்றும் பராமரிக்கும் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டாம் என

அறிவுறுத்தப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றங்களின் மின்னியலாளர்களை பொருத்தமான NVQ மட்டத்திற்கு இணைத்தலுக்கான பயிற்சியினை வழங்குவதற்கு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இணக்கம் தெரிவித்துள்ளதாக உள்ளூராட்சி ஆணையாளரால் தெரிவித்ததற்கமைவாக அவ் நடவடிக்கையினை மேற்கொள்ளும் வரையான காலப்பகுதிக்கு எமது பிரதேசசபையின் மீள்குடியேற்ற பிரதேசங்களிலுள்ள வீதிகளுக்கும் மற்றும் அத்தியாவசியமான வீதிகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் வீதி விளக்கினை பொருத்துவதற்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ் அவர்கள் கொக்குவிலில் நடைபெற்ற மின் விபத்தின் காரணமாகவா இவ்வாறான நடைமுறையினை கொண்டு வந்தார்கள் எனக் கேட்டார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் இவ் நடைமுறை முன்பே இருந்தது எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் ஊழியர்களுக்கு காப்புறுதி செய்ய முடியாதா என்று கேட்டார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் மின்சாரசபையின் அனுமதிப்பத்திரம் பெற்ற ஒருவருக்கு தான் காப்புறுதி செய்யலாம் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் அவர்கள் திருத்துவதற்காக கழட்டிக் கொண்டு வரும் மின் விளக்குகள் மறுபடியும் அதே இடத்தில் பொருத்தப்படுகின்றனவா எனக் கேட்டார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் அதே இடத்தில் பொருத்தப்படுகிறது அவ்வாறு பொருத்தாதுவிட்டால் அதன் விபரத்தினை தருமாறு தெரிவித்தார்.
- வீதி விளக்குகள் பொருத்துவது தொடர்பாக பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல :- 10/2025.07.17**

சபையின் நிரந்தர மற்றும் வெளிவாரி மின்னியலாளருக்கு பொருத்தமான NVQ மட்டத்திற்கு பயிற்சி வழங்குவதற்கு மின்சார சபையின் அனுமதிப்பத்திரம் (License) கிடைக்கும் வரைக்கும் எமது சபையின் மீள்குடியேற்ற பிரதேசங்களிலுள்ள மக்களின் பாதுகாப்பினை கருத்திற்கொண்டு வீதி விளக்கினை பொருத்தும் செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் அவர்கள் புனரமைக்கப்படவேண்டிய வீதிகளின் விபரங்களின் பட்டியலினை கோரியுள்ளீர்கள். விரைவாக புனரமைப்புச்செய்யப்பட வேண்டிய வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட வேண்டுமெனவும் அவ் வீதிகள் தொழில் நுட்ப குழுவின் சிபாரிசுடன் செய்தல் வேண்டும் என்றும் மற்றும் மழை காலங்களில் போக்குவரத்து செய்யமுடியாத நிலையிலுள்ள வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவில்லை எனவும் ஆனால் அதன் முன் ஓரளவு நல்ல நிலையில் உள்ள வீதிகள் புனரமைப்புச்செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் வட்டார உறுப்பினர்களின் உதவியுடன் அந்த வட்டாரத்தில் உள்ள வீதிகள் தெரிவு செய்யப்பட்டு புனரமைப்புக்கள் செய்யப்படும் எனவும் தொழில் நுட்ப குழுவின் சிபாரிசு தேவையில்லை எனவும் அவர்கள் மூலப் பொருட்களின் அளவு, தரம், வேலைகளை கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபடலாம் எனத் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் தொழில் நுட்ப குழுவினை சுயமாக இயங்க விடுவதில்லை எனவும் அவர்களுக்கு உரிய காலத்தில் அறிவித்தல்கள் வழங்குவதில்லை எனவும் கூறினார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் தெரிவிக்கையில் சபையுடன் இணைந்து வேலை செய்யாத புதிய அலுவலர்கள் தான் தற்பொழுது வேலைப்பகுதியில் விடய அலுவலர்களாக கடமையாற்றுகிறார்கள் எனவும் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடு இடம்பெறாது எனவும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் பாலசுப்பிரமணியம் சிறிதரன் அவர்கள் 11ம் வட்டாரத்தில் புனரமைப்புச்செய்யப்படும் வீதிக்கு மூலப்பொருள் அளவிடும் போது தனக்கு தெரியப்படுத்தப்படவில்லை என்று தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் தெரிவிக்கையில் சபை அலுவலர்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் மற்றும் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர்கள் யார் என்பதை அறிந்து இருக்கமாட்டார்கள் அதனால் தங்களுக்கு தெரியப்படுத்தப்படவில்லை. எனவே எதிர்காலத்தில் இப்படியான செயற்பாடுகள் இடம்பெறமாட்டாது எனவும் தெரிவித்தார்.

➢ அளவெட்டி நூலகத்தின் கட்டட வேலை நடைபெற்று வருகின்றது. சபை வரும் முன்பே நூலகம் மல்லாக உப அலுவலகத்தின் மேல்மாடியில் இயங்கி வருகின்றது. மேல் மாடியில் இயங்குவது பொருத்தப்பாடில்லாத காரணத்தினால் அளவெட்டியில் ஒரு வீட்டை விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டிற்கேற்ப வாடகைக்கு பெற்று நூலக கட்டட வேலை நிறைவு பெறும் வரை அவ்வீட்டில் நூலகத்தினை நடாத்துவதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் நூலகம் சம்பந்தமாக கௌரவ தவிசாளருடன் சபை வர முன்பு எங்களுடைய அளவெட்டி பிரதேசத்திலுள்ள கட்டடத்தில் நூலகத்தினை இடமாற்றம் செய்து இயங்க வைக்குமாறு கோரியிருந்தும் ஆனால் தாங்கள் அதனை நடைமுறைப்படுத்தவில்லை என தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் தங்களுடைய நூலகக் கட்டடம் என்னால் பார்வையிடப்பட்டது எனவும் அதில் பல திருத்த வேலைகள் உள்ளதனாலும் கதவு யன்னல்கள் உடைந்து போயுள்ளதாலும் அக்கட்டடம் பொருத்தப்பாடு இல்லாமல் இருக்கும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் அளவெட்டி மகாஜன சபை கட்டடமும் உள்ளது அதனையும் பயன்படுத்தலாம் என்றார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் அக்கட்டடம் நூலகம் இயங்குவதற்கு பொருத்தப்பாடு இல்லை என்றும் அங்கு வேறு செயற்பாடுகள் நடைபெறுகின்றது என்றும் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 11/2025.07.17**

அளவெட்டி நூலகத்தின் கட்டட வேலை நிறைவு பெறும் வரை அளவெட்டியில் ஒரு வீட்டை விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டிற்கேற்ப வாடகைக்கு பெற்று அவ்வீட்டில் நூலகத்தினை நடத்துவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

➢ கீரிமலையில் ஆடி அமாவாசை தினத்திற்கான (24.07.2025) தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்கல் மற்றும் பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் சிவாச்சாரியார்களை பதிவு செய்தல் தொடர்பான விபரங்களை பத்திரிகையில் பிரசுரித்தமைக்கான மற்றும் பதிவு செய்தமைக்கு சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் சிவாச்சாரியார்களுக்கு இடம் ஒதுக்கப்படும் போது சரியான முறையில் அவர்களை மேற்பார்வை செய்தல் வேண்டும் எனத் தெரிவித்தார். கடந்த ஆண்டு ஆடிஅமாவாசை தினத்தன்று அசம்பாவிதங்கள் நடைபெற்றதை போன்று இம்முறையும் அசம்பாவிதங்கள் நடைபெறாமல் சரியான முறையில் கண்காணிப்பு செய்யப்படவேண்டும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் அதனால் தான் இம்முறை சிவாச்சாரியார் என்ற அடையாள அட்டை உள்ளவர்கள் மட்டும் தான் பதிவு செய்யப்படுவார்கள் சென்ற வருடம் மாதிரி இல்லாது ஒழுங்கான முறையில் கண்காணிப்புச் செய்யப்படும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் கருணாகரன் கஜகரன் அவர்கள் இந்த முறை மாவிட்டபுரத்தில் இருந்து மூன்று சுவாமிகள் கீரிமலைக்கு செல்லவிருக்கின்றது என்றும் எனவே மாவிட்டபுரம் கீரிமலை வீதி துப்பரவு செய்யப்பட வேண்டும் எனக் கூறினார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் துப்பரவு வேலைகள் நடைபெற்று வருகின்றது எனவும் மற்றும் RDA யினால் வீதி ஓரங்களுக்கு கிரவல் மண் அணைக்கப்படுகின்றது எனவும் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 12/2025.07.17**
கீரிமலையில் ஆடி அமாவாசை தினத்திற்கான (24.07.2025) தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்கல் மற்றும் பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் சிவாச்சாரியார்களை பதிவு செய்தல் தொடர்பான விபரங்களை பத்திரிகையில் பிரசுரித்தமைக்கான மற்றும் பதிவு செய்தமைக்கான தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் சுரேகா கோகுலன் அவர்கள் சென்ற கூட்டத்தில் உறுப்பினர்களின் அறிமுகம் இடம்பெற்று இருக்க வேண்டும் ஆனால் நடைபெறவில்லை எனவே அதனை இன்று நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.
- கௌரவ தவிசாளர் கூறுகையில் முதலாவது கூட்டத்தில் கௌரவ உறுப்பினர்களது அறிமுகவுரை இடம்பெற்றிருக்க வேண்டுமெனவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் நேரம் வழங்க முடியாதிருந்தது. அதனால் இன்றைய தினம் கௌரவ உறுப்பினர் சுரேகா கோகுலன் கோரியதற்கமைய நேரம் வழங்கப்படுவதாகவும் உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் அறிமுகத்தினை மேற்கொள்ளுமாறும் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து அனைத்து உறுப்பினர்களினதும் அறிமுகம் இடம்பெற்றது.
- தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்கள் கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் தங்களை அறிமுகம் செய்தமைக்கு நன்றிகளை தெரிவித்துக்கொண்டு ஏனைய விடயங்களுக்கு செல்லலாம் என தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் கந்தசாமி மனோகரராசா அவர்கள் பலாலி மருதடிச்சந்தியில் வலிகாமம் கிழக்கு பிரதேசசபை பெயர் பலகை வைத்துள்ளார்கள் ஆனால் அந்த இடம் வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு உரியது என கூறினார். சோலைவரி வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் தான் செலுத்துவது என்றும் மற்றும் வீட்டு திட்ட அனுமதிகள் வலிகாமம் வடக்கு பிரதேசசபையினால் தான் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

➢ கௌரவ தவிசாளர் அவர்கள் வீதிகள் புனரமைப்பு மற்றும் வீட்டு திட்ட அனுமதிகள் யாவும் வலிகாமம் வடக்கு பிரதேச சபையால் தான் செய்யப்பட்டது என்றும் மற்றும் சில சமயங்களில் கிராம அலுவலர் பிரிவுகள் மாற்றமடைந்து இருக்கலாம் அவ் பிரதேசம் பிரதேசசபைப்பதிவில் பத்மமேனி இறையென்று பதியப்பட்டுள்ளது. பலாலி கிழக்கு வட்டாரத்தில் பலாலி கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவும் பலாலி வடக்கு கிராமசேவகர் பிரிவு J/254 தேனார் வெளி வீதியின் கிழக்கு பகுதி J/254 கிராமசேவகர் பிரிவில் பதியப்பட்டு உள்ளதா என்பதையும் அதன் வரைபடத்தையும் பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்திய பின்பு நடவடிக்கைக்கு செல்லலாம் எனவும் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 13/2025.07.17**

பலாலி வடக்கு, பலாலி கிழக்கு, பலாலி தெற்கு எல்லையினை வரையறுத்து வரைபடமாக வழங்குமாறு பிரதேச செயலாளரிடம் கோரிப்பெறுவதென கௌரவ உறுப்பினர் கந்தசாமி மனோகரராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் றொசாந்தகுமார் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

➢ கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ் அவர்கள் இவ்வாறு தான் அளவெட்டி வடக்கிலும் எல்லை பிரச்சனை காணப்படுகின்றது. வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை அளவெட்டி வடக்கிலுள்ள பொன்னிப்புல எல்லை தங்களுக்குரியது என்று தெரிவித்திருப்பினும் வலிகாமம் வடக்கு பிரதேச சபையினால் அவ்விடத்திலுள்ள மக்களுக்கு கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். அளவெட்டி வடக்கு J/215 எல்லையை சரியான முறையில் வரையறுத்துத்தருமாறு பிரதேசசெயலாளரிடம் கோருவதற்கு பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல :- 14/2025.07.17**

அளவெட்டி வடக்கு J/215 எல்லை சரியான முறையில் வரையறுத்து வரைபடமாக வழங்குமாறு பிரதேச செயலாளரிடம் கோரிப்பெறுவதென கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயறாஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் றொசாந்தகுமார் அவர்கள் பலாலி வடக்கிலுள்ள மேய்ச்சல் நிலங்களில் மக்களின் குடியேற்றங்கள் நடந்து மிகுதியாகவுள்ள நிலப்பரப்பில் எமக்கு சில பொது கட்டமைப்புகள் தேவைப்படுகின்றது பொதுவாக தபால் அலுவலகம், வைத்தியசாலை, நூலகம் மற்றும் வங்கி என்பன. எமது பிரதேச இளைஞர்கள் விளையாடுவதற்கு விளையாட்டு மைதானம் இல்லை. ஆடு மாடு மேய்ப்பதற்கு மேய்ச்சல் நிலங்கள் இல்லை எனவும் இராணுவத்தினர்

அவ்விடங்களிலுள்ள தோட்டக் காணிகளில் கற்களினை கொண்டு வந்து கொட்டுகிறார்கள் என்றும் கூறினார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் பலாலி இராணுவ முகாமிற்கு முன்னால் உப தபால் அலுவலகம் காணப்படுகின்றது. அங்கு மேய்ச்சல் நிலம் இல்லை எனவும் அங்கு காணப்படும் அரச காணிகளில் எமக்கு தேவையான கட்டடங்களை கட்டலாம் எனவும் காலம் காலமாக இராணுவ வேலிகள் அகற்றப்படும் போது மக்களின் காணிகளை பள்ளமாக்கி அம் மண்ணினை அள்ளி தங்களின் உள்ளக வீதிகளுக்கு போடுகின்றார்கள் என்றும் இராணுவ வேலிகள் பின்நகர்த்தப்பட்ட பின்னர் உள்ளக வீதிகளுக்கு மக்களின் காணிகளிலுள்ள மண்களை அகழ்வதால் மக்களின் காணிகள் பள்ளமாவதாலும் மக்களின் விவசாய நிலங்கள் எதிர்காலத்தில் விவசாய நிலங்கலாக பாவிக்க முடியாமல் போவதாகவும் ஆகவே இவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறும் கோருவோம் என்றும் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 15/2025.07.17**

இராணுவ வேலிகள் பின்நகர்த்தப்பட்ட பின்னர் உள்ளக வீதிகளுக்கு மக்களின் காணிகளிலுள்ள மண்களை அகழ்வதால் மக்களின் காணிகள் பள்ளமாவதாலும் மக்களின் விவசாய நிலங்கள் எதிர்காலத்தில் விவசாய நிலங்கலாக பாவிக்க இயலாமல் போகும். எனவே இவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு யாழ்மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியினை கோருவதென கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி ஜெயரூபமூர்த்தி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இத் தீர்மானத்தினை யாழ்மாவட்ட இராணுவ கட்டளைத்தளபதிக்கு கடிதம் மூலம் அனுப்பி அதன் பிரதிகளை ஆளுநருக்கும் மாவட்ட செயலாளருக்கும் அனுப்புவதாகவும் சபையின் கௌரவ உறுப்பினர்களால் தீர்மானிக்கப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் அவர்கள் சென்ற கூட்டத்தில் தையிட்டி விகாரை சம்பந்தமாக தீர்மானம் கொண்டு வந்தோம் அவ் விகாரை சட்டவிரோதமான கட்டடம் என்றும் இன்று அதற்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் அவர்கள் இவ்விடயத்தில் ஒரு கட்சி முன்னிலைப்படுத்தி நிற்பதால் ஏனைய கட்சி உறுப்பினர்கள் இதில் கலந்துகொள்ளாமல் உள்ளார்கள் எனத் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் சபையினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதென்றால் சட்டரீதியாக அணுக வேண்டும் என்று தெரிவித்தார்.
- தொடர்ந்து தையிட்டி திஸ்ஸ விகாரை சட்டவிரோதமான கட்டடம் என்றும் அதற்கு சபையினால் வழக்கு தாக்கல் செய்யப்படவேண்டுமென்றும் சபை உறுப்பினர்களிடையே வாக்குவாதங்கள் நடைபெற்றன.
- கௌரவ தவிசாளர் அவர்கள் தையிட்டி விகாரைக்கு எதிராக சபையால் வழக்கு ஒன்று மேற்கொள்வதற்கு கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் முன்மொழிந்துள்ளார் அதனை ஒருவர் வழிமொழிய வேண்டும் என்றும் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் சபையில் ஏதும் மாற்றுக் கருத்து இருந்தால் கௌரவ உறுப்பினர்களால் தெரியப்படுத்தப்பட வேண்டும் எனவும் அதை விடுத்து நீங்கள் உங்களுக்குள் வாக்குவாதப்படுவது ஒரு ஆரோக்கியமான சபைக்கு நல்லதல்ல என்றும் ஒருவர் கருத்துக் கூறி முடித்த பின் மற்றவர் கருத்து தெரிவிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் எல்லோருக்கும் ஆதங்கம் இருக்கும் சபையின் கௌரவ உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் 1990ம் ஆண்டு இடம்பெயர்ந்து இன்றுவரை சொந்த நிலத்தில் மீளக்குடியமராமல் இருக்கிறார்கள் என்றும் இராணுவ அத்துமீறலினால் தான் அந்த விகாரை கட்டப்பட்டு இருக்கின்றது என்றும் தற்போதுள்ள ஆட்சி மாற்றத்தினூடாக  இராணுவம் அதில் இருந்து நீக்கப்பட்டு இருக்கிறார்கள் அதனால் தான் நாங்கள் அலுவலக ரீதியாக கடிதம் கோரியுள்ளோம் என்றும் நாங்கள் ஏற்கனவே இது சம்பந்தமாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் கடிதம் அனுப்பினோம் அவர்கள் உடனடியாக புத்தசாசன அமைச்சுக்கு கடிதம் அனுப்பினார்கள். இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கூறியிருக்கிறார்கள்.  இப்படி ஒழுங்கு முறையாக நடந்து கொண்டு இருக்கும் போது சபையின் காலம் முடிந்து விட்டது. பின்பு இது சம்பந்தமாக மக்களாலும் புத்தசாசன அமைச்சுக்கு முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். ஆனால் இவ்விடயம் வித்தியாசமானது. தனியார் காணியில் அத்துமீறி விகாரைக்குரிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. விகாரைக்குரிய காணி 20 பரப்புள்ளது அக்காணிக்குள் கட்டப்படும் கட்டடத்திற்கு அனுமதி வழங்க அதனை புத்தசாசன அமைச்சிடம் அனுமதி பெற்றுத் தருமாறு கேட்டிருந்தோம் என்று தெரிவித்தார். குறிப்பிட்ட காலப்பகுதியில் நடைபெற்ற ஆட்சி மாற்றத்தில் பொது மக்களின் காணிக்குள் அத்துமீறி கட்டப்பட்டது. அது சம்பந்தமாக மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலும் பாராளுமன்ற உறுப்பினர்களாலும் கதைக்கப்பட்டது அதற்கு பின்பும் புதிய கட்டடம் அமைக்கப்பட்டது என்றும் அது சம்பந்தமாக ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் தெரிவித்த போது அவர்களால் மறுக்கப்பட்டது. ஆனால் அதற்கான ஆதாரங்களை நாங்கள் சமர்ப்பித்து இருக்கிறோம். அதற்கான பதில்களும் கிடைக்குமென எதிர்பார்க்கின்றேன் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் அவர்களால் மீண்டும் விகாரை அமைக்கப்பட்டது சட்டவிரோதமானதென்று சபையினால் வழக்கினை தாக்கல் செய்யுமாறு கோரப்பட்டது.
- கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்களாலும் சபையினால் வழக்கு தாக்கல் செய்யுமாறு கோரப்பட்டது. சென்ற சபைக் காலத்தின் போதே இந்தத் தீர்மானம் எம்மால் நிறைவேற்றப்பட்டது. கௌரவ தவிசாளர் அவர்களால் கடிதங்கள் உரியவர்களுக்கு அனுப்பப்பட்டதென்றும் தெரிவிக்கப்பட்டது. காலத்தினை மீண்டும் தாழ்த்தாமல் சட்டவிரோதமானது என்ற தீர்மானத்தினை எடுத்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டது.
- கௌரவ உறுப்பினர்களின் விவாதங்களின் அடிப்படையில் பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல :- 16/2025.07.17**

தையிட்டி திஸ்ஸ விகாரையானது சட்டவிரோதமானது என்றும் சபையினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் பத்மநாதன் சாருஜன் நாங்கள் இரண்டு வருடத்திற்கும் மேலாக பொது மக்களுடன் சேர்ந்து போராட்டத்தில் ஈடுபடுகின்றோம். கௌரவ உறுப்பினர் கந்தசாமி மனோகரராசா அவர்களின் கருத்தின் பிரகாரம் தற்போது நடைபெறும் போராட்டங்களின் மூலம் புத்தர்சிலை வைப்பதை நிறுத்தி இருக்கிறார்கள் என்றும் விகாரை சம்பந்தமாக சென்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தவிசாளர் அவர்கள் தெரிவித்துள்ளீர்கள். பதில் கிடைக்கும்

வரை பொறுத்திருந்தால் தற்போது அக்காணிக்குள் புதிதாக மலசலகூடம் அமைக்கிறார்கள் என்றும் அதனை பார்வையிட வேண்டும் என்றால் இச் சபைக் கூட்டம் நிறைவு பெற்றதும் எல்லா உறுப்பினர்களும் சென்று பார்வையிடுவோம் எனவும் தெரிவித்தார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் இன்று பார்வையிடுவோம் என்று தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் அவர்கள் சபைக் கூட்டத்தினை ஊடகவியலாளர் பார்வையிட்டுக் கொண்டிருப்பதனால் விகாரைக்குரிய சட்ட நடவடிக்கைக்கு போகும் போது அனைத்து கட்சிகளிலும் சட்டத்தரணிகள் இருக்கிறார்கள் என்றும் அனைத்து கட்சிகளிலுமுள்ள அனைத்து சட்டத்தரணிகளும் வழக்கிற்கு வாதாட வந்தால் எமக்கு வழக்கு செலவு குறைவாக இருக்கும். என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ம.ஆ.சுமந்திரன் அவர்கள் இருக்கிறார் என்றும் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் ஜனாதிபதி சட்டத்தரணி ம.ஆ.சுமந்திரன் அவர்கள் வழக்கு விடயத்தினை கையாள்வார் என்றும் தற்போது அவர்தான் 6376 ஏக்கர் காணிக்கெதிரான வழக்கினை தாக்கல் செய்து தொடர்நடவடிக்கை எடுத்து வருகின்றார் எனவும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் அவர்கள் இன்று சட்டத்துறையில் மிக ஆளுமையுள்ள சட்டத்தரணி ம.ஆ.சுமந்திரன் என்று தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் இந்த வழக்கை எங்களுடைய சபைக்காக அவர் இலவசமாக வாதாடுவார் எனவும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் குலத்துங்கம் வில்வராசா அவர்கள் பலாலி தெற்கிலுள்ள இந்து மயானத்தின் கிழக்கு பக்க மதில் பகுதியளவில் புனரமைக்கப்படாமல் உள்ளது என்றும் தற்போது மீள்குடியேறும் மக்களுக்குரிய சுகாதார வசதிகளையும் செய்து தரும்படியும் மற்றும் வீதிகளையும் புனரமைத்து தருமாறும் கேட்டுக்கொண்டார்.

**தீர்மான இல :- 17/2025.07.17**

பலாலி தெற்கில் உள்ள இந்து மயானத்தின் கிழக்குப்பகுதியில் புனரமைக்கப்படாத சுற்றுமதிலினை புனரமைத்து அப்பகுதியில் மீள்குடியேறவுள்ள மக்களுக்கான சுகாதார வசதியினையும் வழங்குவதற்கும் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் குலத்துங்கம் வில்வராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் ரொசாந்தகுமார் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் குலத்துங்கம் வில்வராசா மேலும் சிவன் வீதி, மண்டப வீதி மற்றும் அதனோடு இணைந்த குறுக்கு வீதியும் புனரமைக்கப்பட வேண்டும் எனவும் மைதானமும் செப்பனிடுதல் வேண்டும் அதனை செப்பனிட்டு தந்தால் அதில் உள்ள மீள்குடியேறியுள்ள குடும்பத்திலுள்ள பிள்ளைகளுக்கு முன்பள்ளி அமைக்கலாம் எனவும் வீதி விளக்குகளும் திருத்தப்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் முதல் கட்டமாக மதிலினை புனரமைப்போம் என்றும் வீதிகளினை வேறு நிதிகள் கிடைக்கும் பட்சத்தில் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மற்றும் விளையாட்டுத்திடல் விளையாட்டு மைதானமாகவே இருத்தல் வேண்டும் அவர்களுக்கு முன்பள்ளி அமைப்பதற்கு வேறு காணிகள் இருக்கின்றதெனவும் மைதானம் புனரமைப்புச்செய்வதென்றால் மைதானத்தினை பிரதேச சபையின் பெயருக்கு மாற்றிய பின்பு தான் அதற்குரிய வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கலாம் எனவும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்தின் ஒருபக்க மதில் உயர்த்தி கட்டவேண்டும் எனவும் ஒரு பக்கம்

உயர்வாகவும் மற்றைய பக்கம் பதிவாகவும் காணப்படுகின்றது என்று தெரிவித்தார். அத்துடன் மயானங்களும் துப்பரவு செய்யப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் மயான மதிலினை உயர்த்தி கட்டமுடியாது என்றும் அம்மதிலினை உடைத்து புதிதாக கட்டப்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

- ➢ மயானம் சம்பந்தமாக சபை வர முதல் 15 மயானங்கள் புனரமைப்பதற்காகவும் பராமரிப்பதற்காகவும் 1.6 மில்லியனுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு 9லட்சம் செலவும் செய்யப்பட்டுள்ளது. சபை பொறுப்பேற்றபின்பு ஒப்பந்ததாரரிடம் Work plan கேட்ட போது அவர்களால் தரப்பட்ட Work Plan உள்ள திகதிகளின் அடிப்படையில் திருத்த வேலைகள் எதுவும் நடைபெறவில்லை. சபை ஊழியர்களைக் கொண்டு துப்பரவு செய்வதென்றால் ஒப்பந்தம் இரத்துச்செய்யப்படவேண்டும். குறித்த ஒப்பந்தத்தை இரத்துச்செய்வதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 18/2025.07.17**
மயானங்கள் புனரமைப்பதற்காகவும் பராமரிப்பதற்காகவும் 1.6மில்லியனுக்கு வீமன்காமம் இளைஞர் சங்க சனசமூக நிலையத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தினை இரத்துச்செய்வதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தேவச்சந்திரன் வஜிந்தன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் துறைராஜா காளிதாஸ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் இராசேந்திரம் மிதுஷன் அவர்கள் மல்லாகம் சந்தையில் மீன் விற்பனையில் ஈடுபடும் வியாபாரிகளின் எண்ணிக்கையினை அதிகரிக்கவேண்டுமெனத் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் மீன் விற்பனை செய்பவர்களை அதிகரிப்பதற்கு ஒலிபெருக்கி மூலம் வீதிகளில் மீன் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களை சந்தைக்குள் மீன் விற்பனையில் ஈடுபட வேண்டுமென அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் சபையால் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கும் போது ஒவ்வொரு இடமாக நிறுத்தி அறிவிக்க வேண்டும் என்றும் அன்று அறிவித்து கொண்டு சென்றபோது விளங்கவில்லை பின் மோட்டார் வாகனத்தில் அதனை பின்நோக்கி சென்று கேட்ட போதுதான் தராசுகளுக்கு சீல் வைப்பது சம்பந்தமாக அறிவித்தது என்று புரிந்தது என கூறினார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் கூறுகையில் எதிர்வரும் காலங்களில் உரிய முறையில் அறிவிக்க ஏற்பாடு செய்யப்படும் எனத் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் ஐயாத்துரை மதூசன் அவர்கள் தனது வட்டாரத்தில் உள்ள பெரியபுலம் வீதி நாகதம்பிரான் வீதியினை புனரமைத்து தருமாறு கேட்டுக்கொண்டார். தனது வட்டாரத்திலுள்ள வீதிகளுக்கு வீதிவிளக்குகள் பொருத்தித்தருமாறு மக்கள் கோரியுள்ளார்கள் எனவும் தெரிவித்தார். சென்ற கூட்டத்தில் முன்வைத்த பொதுநோக்கு மண்டபம் தொடர்பான காணி இன்று வரை துப்பரவு செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் JCB திருத்தம் செய்த பின்பு துப்பரவு செய்து தருவதாக தெரிவித்தார். கட்டடம் கட்டும் வரை அவ்விடத்தினை மைதானமாக பாவிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்து தரப்படும் என்றும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் முத்தலிப் ரகுநாதன் அவர்கள் தனது வட்டாரத்தில் நீராவி மருதடி வீதிகள் பிரச்சனைகள் காரணமாக இடையில் 100M இன்னும் புனரமைக்கப்படவில்லை. தற்போது இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளார் என்றும் குறித்த வீதிகளினை புனரமைத்துத்தருமாறும் மற்றும் தனது வட்டாரத்திலுள்ள ஏனைய வீதிகளிளையும் புனரமைத்து தருமாறு கேட்டுக்கொண்டார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் முன்னுரிமை அடிப்படையில் வீதிகளின் பெயர் விபரங்களினை தருமாறு கூறினார்.
- கௌரவ உறுப்பினர் மேகலா திருஞானசம்பந்தர் கருகம்பனை சந்தியில் இருந்து கவுணாவத்தை வரையான வீதி மழைகாலத்தில் போக்குவரத்து செய்ய முடியாமல் காணப்படுகின்றது என்றும் அதனை புனரமைத்து தருமாறும் கேட்டுக்கொண்டார்.
- கௌரவ உறுப்பினர் ஜெகதீஸ்வரி சுதர்சன் அவர்கள் 11ம் திகதி 16ம் வட்டாரத்திலுள்ள இரு வீதிகள் காப்பெற் வீதி போடுவது சம்பந்தமாக எங்களுக்கு அறிவித்தல் வழங்கப்படவில்லை எனத் தெரவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பிரதேச செயலகத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டது என்றும் அவ் வீதியில் வசிக்கும் மக்களுடன் கூட்டம் வைத்தார்கள். எம்மால் அக் கலந்துரையாடல் ஒழுங்கு படுத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. எம்மை சொத்துடைமையாளர்கள் என்ற ரீதியில் அழைத்துள்ளார்கள் என்றும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் சுரேகா கோகுலன் அவர்கள் தான் புதிதாக சபைக்கு வருகை தந்துள்ளேன் என்றும் தனக்கு பிரதேசசபைச் சட்டத்தினை அறிவதற்காக பிரதேசசபைச் சட்டப்புத்தகம் ஒன்றினை வழங்குமாறு கேட்டுக்கொண்டார். வீதி விளக்குகளை மிகவும் முக்கியமான இடங்களில் பொருத்துமாறும் குறிப்பாக கல்வி நிலையங்களுக்கு அண்மையிலுள்ள போக்குவரத்து வீதிகளுக்கு பொருத்துமாறும் கேட்டுக்கொண்டார்.
- கௌரவ உறுப்பினர் சிவசுப்பிரமணியம் சீத்தா அவர்கள் தெல்லிப்பளை வைத்தியசாலை டச்சு வீதியில் வீதி மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் தொடக்கம் காங்கேசன்துறை சந்தி வரை வீதி விளக்குகளினை பொருத்துமாறு கேட்டுக்கொண்டார்.
- அதற்கு கௌரவ தவிசாளர் அவர்கள் டச்சு வீதியில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது எனவும் காங்கேசன்துறை வீதியில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது எனவும் அதனை திருத்த வேண்டுமெனவும் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் பருத்தித்துறை பொன்னாலை வீதியினை ஆடி அமாவாசைக்காக கீரிமலைக்கு மக்கள் சென்றுவருவதற்கு தற்காலிகமாக திறந்து விடுவிதற்கு காங்கேசன்துறை கடற்படை தளபதியிடம்கடித மூலம் கோருமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல :- 19/2025.07.17**

பருத்தித்துறை பொன்னாலை திறக்கப்படாமல் உள்ள வீதியினை ஆடி அமாவசைக்காக கீரிமலைக்கு மக்கள் சென்றுவருவதற்கு தற்காலிகமாக திறந்து விடுமாறு காங்கேசன்துறை கடற்படை தளபதியிடம் கோருவதென கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் முன்மொழிய முன்மொழிய கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் தர்மலிங்கம் முரளிதரன் அவர்கள் 768 பஸ் செல்லும் பாதை கீரிமலை அளவெட்டி வரையான பாதை இருபுறமும் பற்றையாக உள்ளது இலந்தைகலட்டி வைரவர் வீதியும் பற்றையாக உள்ளது. மற்றும் கீரிமலையில் அந்தியேட்டி கிரியைகளை மேற்கொள்ளும் சிவாச்சாரியார்கள் மக்களிடமிருந்து அறவீடுகளை ஒரே மாதிரி அறவீடு செய்யாமல் வேறுபட்ட தொகைகள் அறவீடு செய்கின்றார்கள் எனவும் அதனை ஒரு கட்டுப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளவேண்டுமெனத் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் அந்தியேட்டி கிரியை அறவீட்டினை சபை உத்தியோகத்தர்களைக் கொண்டு ஒழுங்குமுறையினை மேற்கொள்ளுமாறு தெரிவித்தார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் வீதியின் இரு பக்கங்களையும் மக்களைக்கொண்டு சிரமதான அடிப்படையில் துப்பரவு செய்யுமாறும் குப்பைகளை சபை வாகனத்தின் மூலம் ஏற்றுவதாகவும் தெரிவித்தார். மேலும் அந்தியேட்டி கிரியை அறவீட்டினை ஒழுங்குமுறைப்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் துறைராஜா காளிதாஸ் அவர்கள் மாவைகலட்டி கிராமத்தில் சனத்தொகை அதிகமாக காணப்படுவதனால் வீதியால் செல்லும் வாகனங்கள் வேகமாக பயணிப்பதன் காரணமாக வீதி விபத்துக்கள் ஏற்படும் ஆபத்து காணப்படுவதனால் அவ் வீதியில் வீதித்தடையினை ஏற்படுத்தித்தருமாறு கேட்டுக்கொண்டார். மற்றும் மாவைகலட்டியில் பிரதேச செயலகத்துக்கு சமுர்த்தி வங்கி இயங்கி வந்த காணியினை பெற்று தற்காலிக சந்தை அமைத்துத்தரும்படி கோரினார். மேலும் எமது கிராமத்திலுள்ள பாதைகள் பற்றையாக இருப்பதால் எங்கள் கிராமத்துக்கு போக்குவரத்து வாகனங்கள் வருவது (Bus) மிகவும் இடர்பாடாக காணப்படுவதனால் சபையினால் பாதைகளிலுள்ள பற்றைகளை அகற்றி தரும்பட்சத்தில் நாங்கள் போக்குவரத்து வசதியினை ஏற்பாடு செய்யலாம் எனத் தெரிவித்தார்.

- கௌரவ தவிசாளர் தங்களால் வீதித்தடையினை போடமுடியாது என்றும் அதனால் வேறு பிரச்சனைகள் வரும் என்றும் மக்களின் கோரிக்கையினை பெற்று சமர்ப்பிக்கும் போது வீதி தடை அமைப்பது தொடர்பாக முடிவெடுக்கலாம் என்றும் தெரிவித்தார். JCB வாகனம் திருத்தி வந்த பின்பு பற்றைகள் துப்பரவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் பென்சமின் தனராஜா அவர்கள் பிரதேசபையில் மூன்று வீதிகள் பதியப்படாமல் உள்ளதாக தெரிவித்துள்ளார்கள். தான் தற்போது மக்களின் கையெழுத்துடன் கடிதம் கொண்டு வந்துள்ளேன். அவ் வீதிகளை பதிவு செய்து தருமாறு கேட்டுக்கொண்டார்.

- கௌரவ தவிசாளர் தாங்கள் முதலில் கூறிய இரு வீதிகளும் பிரதேசசபையின் பதிவில் காணப்படுகின்றது என்றும் மற்றய வீதியினை பதிவு செய்ய நடிவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் கருணாகரன் கஜகரன் அவர்கள் பங்களா வீதியினை ஒரே அளவாக அகலிப்பதற்கான செயற்பாடுகள் நடைபெறுகின்றனவா என கேட்டார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் கூறுகையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் வீதியினை அளந்து கட்டை அடிக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்கள் எனத் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் கந்தசாமி ஜெயரூபமூர்த்தி வசாவிளான் பாடசாலைக்கு முன்னால் ஆட்டோ தரிப்பிடத்தினை ஒழுங்கு படுத்தி தருமாறு கேட்டுக்கொண்டார்.

- கௌரவ தவிசாளர் முன்பு ஆட்டோக்கள் வசாவிளான் பாடசாலைக்கு முன்பாக நிறுத்தியிருந்தார்கள் தற்போது தனியார் ஒருவரின் வீட்டிற்கு முன்னால் ஆட்டோக்களை நிறுத்துவதனால் சில இடர்பாடுகள் காணப்படுகின்றது. அதனை ஒழுங்குபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் கந்தசாமி ஜெயரூபமூர்த்தி மக்கோணாவிலுள்ள கறுப்பு கட்டடம் தனியாருடையதா எனக் கேட்டார்.

- கௌரவ தவிசாளர் அக் கட்டடம் தனியாருடையது எனத் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் சிறிய அனிக்கிலீஸ் பிறேம்ஸ்ரலன் அவர்கள் சென்ற கூட்டத்தில் சனசமூக நிலையங்களின் விபரம் கோரியிருந்தேன். மற்றும் கும்பலை சந்தைக் கடைகளிற்கு பொதுவாகத்தான் மின்சாரம் வழங்கப்படுவதாகவும் அதனை தனித் தனியாக வழங்குமாறு கூறினார். கோழியிறைச்சிக்கடையின் கழிவகற்றல் சீராக நடைபெறுவதில்லை எனவும் கடைகளுக்கு பின் பக்கம் நெற் அடிக்கவில்லை எனவும் மற்றும் கும்பலை சந்தையின் வாசல் பள்ளமாக காணப்படுவதனால் வாசலுக்கு சாய்வு போட வேண்டும் என்றும் கூறினார். அலுக்கை சூசையப்பர் கோயிலடியில் உள்ள மதகினை துப்பரவு செய்து நீர் ஓடும் வழித்தடத்தை மாற்ற வேண்டும் என்றும் கோயில்களில் ஒலிபெருக்கி பாவனைக்கான அனுமதிக்கு பொலிஸினால் அறவிடப்படும் கட்டணம் பிரதேசசபைக்கு வருமானமாக செலுத்தப்படுமா எனக்கேட்டார். கும்பலை சந்தியில் கோயில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. குப்பையாக இருந்த இடத்தை தான் துப்பரவு செய்து அதை அபிவிருத்தி செய்கிறார்கள் கோயில் அமைக்கப்பட்டவர்களாள் அவ்விடத்தில் வளைவு கட்டப்போவதாக தெரிவித்துள்ளார்கள் எனத் தெரிவித்தார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் கும்பலை சந்தைக் கடைகளிற்கு மின்சாரத்தினை தனித்தனியாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதாக தெரிவித்தார். கடைகளுக்கு பின் பக்கம் நெற் அடிக்கலாம் என்றும் வாசல் பாதைக்கு கொங்கிறீற் போட வேண்டும் என்றும் தெரிவித்தார். மேலும் மதகுள்ள பகுதி RDA க்கு உரித்தாகவுள்ளதால் RDA அறிவித்து மழைகாலத்திற்கு முன்பு அதனை சீர் செய்வதாக தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் அவர்கள் தம்பளை சுடலைக்கு செல்கின்ற வீதி ஒரே பற்றையாக உள்ளது. அதனை துப்பரவு செய்வதற்கு வருகிற சனிக்கிழமை சபை ஊழியர்களையும் வாகனத்தினையும் தந்துதவுமாறு கேட்டுக்கொண்டார். தம்பளை சுடலை வீதியில் 2,3 வீதி விளக்குகளும் பொருத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் தெரிவிக்கையில் வாகனத்தினையும் சபை ஊழியர்களையும் ஆடியமாவாசை தினத்தினை முன்னிட்டு வருகிற சனிக்கிழமை ஒழுங்குபடுத்துவது கஷ்டம் என்றும் அடுத்த கிழமை ஒழுங்குபடுத்தி தருவதாக தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கதைக்கும் போது தங்களுடைய கருத்துக்களை தொகுத்து ஒரே நேரத்தில் தமது கருத்தினை தெரிவிக்க வேண்டும் என்றும் அதை விடுத்து ஒவ்வொருவரும் மாறி மாறி கதைத்தால் நாகரிகமான சபையாக இருக்காது எனவும் தெரிவித்தார். கடந்த வருடங்களில் வரவு செலவுத் திட்டத்தில் எனது வட்டாரத்தில் புனரமைப்புச் செய்யப்படவேண்டிய வீதிகள் புனரமைக்கப்படவில்லை எனவும் அடுத்த வருடத்திலாவது வீதிகளை புனரமைத்து தருமாறு கேட்டுக்கொண்டார்.

- கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ் அவர்கள் சென்ற சபைக்காலத்தில் எனது வட்டாரத்திலுள்ள பெரும்பாலான வீதிகள் புனரமைக்கப்படவில்லை எனவும் இம்முறையாவது எனது வட்டாரத்தினை கவனத்தில் எடுத்து அனைத்து வீதிகளையும் புனரமைத்து தருமாறு கேட்டுக்கொண்டார்.

- கௌரவ உறுப்பினர் தேவச்சந்திரன் வஜிந்தன் அவர்கள் சென்ற கூட்டத்தில் பெரிய தம்பிரான் வெள்ளவாய்க்காலையும் குளத்தினையும் புனரமைத்து தருமாறும் கேட்டுக்கொண்டேன் என்று தெரிவித்தார். JCB வந்தவுடன் மழைக் காலம் வர முதல் அதனை துப்பரவு செய்து தருமாறு கேட்டுக்கொண்டார். எனது வட்டாரத்தில் அனேக காணிகள் வீதியோரங்கள் பற்றையாக காணப்படுவதனால் பாடசாலைக்கு சென்று வரும் பெண் பிள்ளைகளின் பாதுகாப்பு காரணமாக துப்பரவு செய்து தருமாறு கேட்டுக்கொண்டார்.
- கௌரவ தவிசாளர் குளம் கமநலசேவை திணைக்களத்திற்குரியது என்றும் அவர்களின் அனுமதியுடன் மட்டம் பார்க்கப்பட்டு மோட்டர்கிரேடரினால் மட்டப்படுத்த நடவடிக்கை எடுப்போம் என்று தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ் அவர்கள் சபையின் பிக்கப் வாகனத்தில் தவிசாளர் தூர இடத்திற்கு பயணம் செய்ய முடியுமா என்று கேள்வி எழுப்பினார்.

- அதற்கு கௌரவ தவிசாளர் அவர்கள் தவிசாளர் எங்கும் போகலாம் என்று தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ் தவிசாளர் எங்கும் போகலாம் ஆனால் தாங்கள் குறிகட்டுவானிற்கு ஏன் சென்றீர்கள் என்று கேட்டார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் தான் நெடுந்தீவு பிரதேசசபை தவிசாளரை சந்திப்பதற்காக சென்று வந்தேன் எனத்தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் அவர்கள் கொல்லன்கலட்டி பிள்ளையார் கோயில் வள்ளுவர் சிலைக்கு யார் அனுமதி கொடுத்தது. பக்கத்தில் இருக்கும் மண்டபம் இயங்கவில்லை என்று தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் ஆனந்தராசா உதயசங்கர் அவர்கள் அது எனது வட்டாரத்துக்கு உரியதென்றும் அது தொடர்பாக நான் ஐயாவுடன் கலந்துரையாடினேன் என்றும் அவரினால் குறித்தொதுக்கப்பட்ட இடப்பரப்பிலே தான் கட்டப்பட்டுள்ளது எனவும் உரிய அனுமதி எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் கொல்லன்கலட்டி பிள்ளையார் கோயில் பெயரில் அனுமதி வழங்கப்பட்டது எனவும் தற்போது மண்டபம் இயங்கி வருகின்றது எனவும் தெரிவித்தார்.

- கௌரவ உறுப்பினர் யோசேவ் மரியதாசன் யோசெவ் இதயராஜ் சென்ற சபைக்காலத்தில் சிறுவர் பூங்காவிற்காக ஒதுக்கிய 1 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டது. எனவும் ஆனால் புனரமைப்பு வேலைகள் இடம்பெறவில்லை எனவும் வேலைகள் ஏன் நடைபெறவில்லை என கேட்டுக்கொண்டார்.

- அதற்கு கௌரவ தவிசாளர் அவர்கள் சிறுவர் பூங்காவிற்காக 2023ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் 03 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அக்காலப்பகுதியில் உரிய வருமானங்கள் கிடைக்காத காரணத்தினால் சிறுவர் பூங்காவிற்கான புனரமைப்புகள் எதுவும் இடம்பெறவில்லை என்றும் தெரிவித்தார். தற்போது கௌரவ உறுப்பினர் தாங்களும் சபையில் உள்ளதனால் எதிர்வரும் காலங்களில் நிதிகள் கிடைக்கப்பெறும் போது புனரமைப்புச் செய்வோம் என்று தெரிவித்தார்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் ஆகஸ்ட் மாத கூட்டம் 2025.08.21ம் வருகிற காரணத்தினால் அன்றைய தினம் நல்லூர் தேர்த்திருவிழா தினமாகவுள்ளதனால் கூட்டத்திகதியில் மாற்றம் ஏதும் செய்ய வேண்டுமா என கோரிய போது அனைத்து கௌரவ உறுப்பினர்களும் 2025.08.20ம் திகதி சபைக் கூட்டத் திகதியினை மாற்றம் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டதற்கமைவாக ஆகஸ்ட் மாதத்திற்கான கூட்டத்தினை 2025.08.20ம் திகதி நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

இத்துடன் கூட்டமானது மாலை 05.15 மணிக்கு இனிதே நிறைவு பெற்றது.

ஒப்பம்: **சி.சிவானந்தன்**
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை

ஒப்பம்: **சோ.சுகிர்தன்**
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை

உண்மைப்பிரதியென உறுதிப்படுத்துகின்றேன்.

**சிவகுமாரன் சிவானந்தன்**
செயலாளர்.
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை